

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## ‘துயரத்தில்’ கண்டடையும், ஆவிக்குரிய தொழுகை!

நம்முடைய வியாகுலமோ, துன்பமோ, பொருளாதார நெருக்கடியோ.... ஆகிய அனைத்து வாழ்வின் கடின சூழ்நிலை நேரங்களிலும் தேவனுடைய அன்பை சிறிதும் சந்தேகிக்காமல் “தேவன் என்னை நேசிக்கிறார்!” என அறிக்கை செய்பவர்கள் மாத்திரமே, சூழ்நிலைகளால் பாதிக்கப்படாதவர்கள்! அவைகளை ‘தெய்வ அன்பால்’ முற்றிலும் ஜெயமெடுத்தவர்கள்!! என ரோமர்.8:36,37 முத்திரை பதிக்கிறது!

இவ்வாறு, எவ்வித துன்ப நிலையும் ‘தேவனுடைய அன்பை’ எங்களைவிட்டு பிரிக்க முடியாது! என்ற ஆழ்ந்த பக்தியே ‘மெய் ஆராதனை’ கொண்டவர்கள்! இவர்களே, பிதாவை ‘எங்கும்’ உண்மையோடு, ஆவியில் தொழுதுகொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் (யோவான்.4:21,24).

*-tr*

பெட்டகம் 20 | செப்டம்பர் 2018 | பரல்கள் 9



## அவரது பணிக்கு 'நொறுங்குண்ட' தாசர்களே தேவை!

தனது ராஜரீக ஊழியத்திற்கு 'அழைப்பு பெற்றவனையே' தேவன் கோதுமை மணியாய் தெரிந்தெடுத்து.... அவனை நொறுக்குகிறார்! மோசேயைப் போன்ற வானாந்திர ஜீவியமோ, யோசேப்பை போன்ற அடிமையின் சிறைவாழ்க்கையோ, இயேசுவைப்போன்ற தச்சுக் கூடமோ அல்லது அவரது சொந்த வீட்டாரின் பகையோ, நண்பனின் துரோகமோ.... ஆகிய அனைத்து சூழ்நிலையையும் ஒன்றன் பின் ஒன்றாய் அனுப்பி, அவனை தேவன் நொறுக்குகிறார்! (ஏசாயா.53:10). அழிப்பதற்கு அல்ல... அவனை ஆசீர்வதித்து, தேவனுடைய ஜனத்திற்கு ஜீவன் தருவதற்கும்.... மிகுந்த பலனை களஞ்சியத்தில் சேர்ப்பதற்கும்! அவ்வாறு செய்கிறார் (யோவான்.12:24). சர்வ வல்ல தேவனால் அழைக்கப்பட்டு, அவரது ஊழியனாய் இருப்பது சொல்லொண்ணா பாக்கியம். ஆகிலும், தேவ மனிதனுக்குரிய விலைக்கிரயம் செலுத்த துணிவு நெஞ்சம் கொண்டவர்களோ இன்று வெகு சொற்பம்!

சொற்பமேயானாலும்... தேவனால் அழைக்கப்பட்ட, நொறுங்குண்ட இந்த உத்தம தாசர்களைக் கொண்டே தமது பணியை தேவன் இன்றும் நிறைவேற்றுகிறார்!!

*-Ed*


**2018 'பரலோக பொக்கிஷங்கள்'**

வருட சந்தா ரூ.**140.00** **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## பெருமை கொண்டவர்களை சபையிலிருந்து நீக்குகிறார்!

*சபையிலுள்ள பெருமையும் அகந்தையும் கொண்ட விசுவாசிகளை தேவன் பகிரங்கமாய் எதிர்த்து நிற்கிறார். இதுபோன்ற ஜனங்களிடம், ஒரு மூப்பர் மென்மையாகவோ அல்லது கண்டும் காணாமலோ நடந்துவிடக்கூடாது. மாறாக, அவர் தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கூறும்போது, மிகுந்த தைரியமாய் கூறி, கர்த்தருடைய நாமத்திற்கு அபகீர்த்தி கொண்டுவரும் பெருமையான எல்லா ஜனங்களையும் கண்டித்துப் பேசவேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகளில் தேவன்* **இந்த மூப்பர்களை சோதித்து,** *அவர்கள் மனுஷரைப் பிரியப்படுத்து கிறார்களா? அல்லது, சபையில் அவருடைய மகிமையைக் குறித்த கரிசனை கொண்டிருக்கிறார்களா? என அறிந்து கொள்கிறார்.*

*நம்முடைய திருத்துதலை ஏற்காமல்,* **மனம் புண்பட்டு** *சிலர் சபையை விட்டு போய்விட்டால், அதைக் குறித்து நாம் சிறிது கூட சஞ்சலமடையக்கூடாது! ஏனென்றால், தேவனே "எல்லா பெருமைக்காரர்களையும்" சபையிலிருந்து அகற்ற தீர்மானம் செய்துள்ளார்.*

> **இந்த உண்மையை, செப்பனியா 3:11-18 வசனங்களின் Living Bible மொழிபெயர்ப்பு கீழ்கண்டவாறு கூறுகிறது: தேவன் சொல்லுவது என்னவென்றால், "நான் உன் நடுவிலிருந்து பெருமையும் அகங்காரமும் கொண்ட ஜனங்களை விலக்கி விடுவேன். என்னுடைய பரிசுத்த பர்வதத்தில் (சபையில்) இனி முதற்கொண்டு யாதொரு பெருமையும் அகங்காரமும் இருப்பதில்லை. மீதியாய் இருக்கும் ஜனங்களே எளிமையும் தாழ்மையும் கொண்ட ஜனமாய் கர்த்தருடைய நாமத்தை நம்பி இருப்பார்கள்! அவர்கள் வஞ்சகம் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் அமரிக்கையோடும், சமாதானத் தோடும் பாதுகாப்பாய் படுத்துக் கொள்வார்கள். இனியும் அவர்களை ஒருவரும் பயமுறுத்த இயலாது. இனி, உரத்த சத்தமாய் கெம்பீரித்து மகிழ்ந்து பாடுங்கள்! உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடு அமர்ந்து ஜீவிக்கிறபடியால், இனி எதற்கும் நீங்கள் பயப்படத் தேவையில்லை. ஆகவே களிகூர்ந்திருங்கள். அவரே உங்களது**

**வல்லமையான இரட்சகர். அவர் உங்களுக்கு ஜெயம் தருவார். உங்கள் மீது கர்த்தர் சந்தோஷமாய் மகிழ்ந்திருப்பார். அவர் உங்களை நேசிப்பாரே அல்லாமல், உங்களை குறைகூறமாட்டார்!" என வாசிக்கிறோம்!**

*இயேசு கூறும்போது "பிதா எனக்குத் தந்தவர்கள் அனைவரும் என்னிடத்தில் வருவார்கள்" (யோவான்.6:37) என்றார். இதே வசனத்தை இப்போது நாமும் கூறிட முடியும்: 'யாருக்கு ஊழியம் செய்யும்படி பிதா விரும்புகிறாரோ, அவர்கள் நம்மோடு தங்கி இருப்பார்கள்'. எனவே, நம்மோடு தங்கியிருக்கும் விசுவாசிகளையே நாம் விரும்புகிறோம்! மற்ற 'போகிற அனைவரும்' போகட்டும்.... ஏனெனில், அதுபோன்றவர்கள் நம்மோடு தங்கியிருந்தால், தொடர்ந்து பிரச்சனைகளையே உருவாக்கிக் கொண்டிருப்பார்கள்!*

*எனவே, வேறு சபைகளோ அல்லது பாஸ்டர்களோ, உங்கள் சபையிலிருந்து சில ஜனங்களை தங்களோடு இழுத்துக் கொண்டால், அவர்களை நீங்கள் விட்டுவிடவேண்டும். அதைக்கூட ஒரு சிறந்த காரணத்திற்காகவே தேவன் தம்முடைய 'சர்வ ஆளுகையில்' அனுமதித்திருப்பார்.*

**இதை யோவான் அப்போஸ்தலன் கூறும்போது "அவர்கள் நம்மை விட்டு பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாய் இருக்கவில்லை! நம்முடையவர்களாய் இருந்தார்களானால், நம்முடனே நிலைத்திருப்பார்களே! 'எல்லோரும் நம்முடையவர்கள் அல்லவென்று' வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள்" (1யோவான்.2:19).**

*அவ்வித "சலிக்கப்படும் வேலையை" தேவன் அனுமதிக்கும் போது "பெலவீனமான ஒரு உண்மை விசுவாசியை கூட" நாம் இழந்து போகமாட்டோம் என்பது உறுதி! கர்த்தர் தொடர்ந்து கூறும்போது "இதோ, இஸ்ரவேல் வம்சத்தாரை சலித்தரிக்கும்படிக்கு நான் கட்டளையிடுவேன்; ஆனாலும், ஒரு (உண்மையான) கோதுமை மணியும் தரையிலே விழுவதில்லை" என ஆமோஸ்.9:9-ல் கூறினார். இது கர்த்தருடைய வாக்குதத்தம்! கோதுமையை புடைப்பதுபோல்,* **சபை புடைக்கப்படுவது அவசியம்.** *இல்லையென்றால், சபையில் தேவன் செய்து கொண்டிருக்கும் அப்பத்தில்,* **கற்களும்** *சேர்ந்து வந்துவிடும். ஆகவே, நாம் தேவனைப் போலவே, நம்முடைய சபையின்* **தரம் ஒன்றின் மீது மாத்திரமே** *ஆர்வம் கொண்டிருக்கவேண்டும், எண்ணிக்கையின் மீது அல்ல!*

**சபையின் ஒழுங்கு நடவடிக்கை**

*சபையில், தேவனுடைய உயர்ந்த தரத்தை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்! ஆகவே, சில சமயங்களில், பாவம்*

*செய்த ஒரு சகோதரனை தவிர்க்க முடியாத பட்சத்தில்,* **சபையை விட்டு புறம்பாக்குவது அவசியமாயிருக்கிறது.** *இந்த அப்போஸ்தல அதிகாரத்தை பவுல் கையாண்டு, ஒரு சமயம் "அப்படிப்பட்ட ஒரு விசுவாசியின் ஆவி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே இரட்சிக்கப் படும்படி, மாம்சத்தின் அழிவுக்காக அவனை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்" (1கொரி.5:5) என கூறினார். இவ்வாறு நடந்தால் மாத்திரமே, ஒரு சபை தூய்மையுள்ளதாய் இருக்க முடியும்!*

*மூப்பர்கள்கூட, தொடர்ந்து பாவத்தில் நிலைத்திருந்தால், முழு சபைக்கும் முன்பாக அவர் கடிந்து கொள்ளப்பட வேண்டும் என பரிசுத்தாவியானவர் கட்டளையிட்டிருக்கிறார். இதே வேத வாக்கிய பகுதியில், உண்மையுள்ள மூப்பர்களுக்குத் தரவேண்டிய இரட்டிப்பான கனமும்! அவர்கள் பாவம் செய்யும்போது எடுக்க வேண்டிய ஒழுங்கு நடவடிக்கையும்! ஒரே கட்டளையாக சேர்ந்தே எழுதப்பட்டுள்ளது (1தீமோ.5:17,20). கர்த்தர்* **மோசேயையும் பேதுருவையும்** *எல்லோருக்கும் முன்பாக கனம் செய்தார். அதே சமயம், அவர்களை எல்லோருக்கும் முன்பாக கடிந்து கொள்ளவும் செய்தார். இதே செயலை, பின்மாற்றமடைந்த ஐந்து சபை மூப்பர்களுக்கும், தேவன் செய்ததை வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் காண்கிறோம்.*

**ஒரு ஸ்தல சபையில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, சபையி லிருந்து புறம்பாக்கப்பட்ட சில விசுவாசிகளிடமோ அல்லது ஒரு சபையில் ஒரு முரட்டாட்ட ஆவியோடு விலகிய விசுவாசிகளிடமோ நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாய் கூறுகிறது. பரிசுத்தாவியானவர் கூறும்போது "அப்படிப்பட்டவனுடனே கூட கலந்திருக்கக்கூடாது" (1கொரி.5:11, 2தெச.3:14) எனவும் "அவர்களை விட்டு விலக வேண்டும்" (ரோமர்.16:17) எனவும் புத்தி கூறினார்.**

*சில விசுவாசிகள், பரிசுத்தாவியானவர் எழுதிய இந்த வசனங்கள் அதிக கடினம் என்று எண்ணி, மதியீனமாய் இவ்வித முரட்டாட்ட காரர்களை ஆறுதல் செய்யும்படி போகிறார்கள். இதன் விளைவு என்னவென்றால், முரட்டாட்டம் செய்து சபையை விட்டு விலகியவர்கள் "பன்றிகளோடு புசித்ததை இனி ஒருபோதும் விட்டு விடாமல், மனந்திரும்பி பிதாவின் வீட்டிற்கு வராதவர்களாகவே" போய் விடுகிறார்கள் (லூக்கா.15:16,17). அதனிமித்தமாய், அவர்கள் நித்திய இழப்பை அடைகிறார்கள். இதுபோன்ற நேரங்களில் செய்திடக்கூடிய ஞானமுள்ள செயல் என்னவென்றால் "அந்த*

*முரட்டாட்ட விசுவாசிகள் மனந்திரும்பி'' தங்கள் பாவங்களை அறிக்கை செய்து, தேவனோடும் அவருடைய ஜனத்தோடும் மீண்டும் ஐக்கியத்தை நாடும்படி* **புத்தி சொல்வதேயாகும்***!*

*சபையில், நீதிக்கு விரோதமாய், ஒருவர் பக்கமாவது 'ஒரு பொய்யான விசுவாச உணர்வோடு' அவருக்கு சார்பாய் இருந்துவிடக் கூடாது. எந்த சகோதரனையும் சார்ந்து கொண்டு, தேவனுடைய தூய்மையான தரத்தை நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. திவ்விய அன்பு, சத்தியத்தில் எப்போதும் மகிழ்ந்திருக்கும்! அது அநீதியில் ஐக்கியம் வைத்திருப்பதில்லை!! (1கொரி.13:6). இங்குதான், நாம் ''தனிமனித ஆராதனை குழுவிலிருந்து''* (CULT) *வேறுப்பட்டிருக் கிறோம். அதுபோன்ற தனிநபர் ஆராதனை குழுவினர்கள், தங்கள் சக அங்கத்தினர் அநீதியான செயலை செய்தாலும், அதை ஆதரிப்பார்கள். இதுபோன்ற பல உதாரணங்களை நாங்கள் கண்டிருக்கிறோம். தனிநபர் ஆராதனை குழுவினர், நம்முடைய சபைகளிலிருந்து 'அவர்களின் பாவத்தினிமித்தம்' புறம்பாக்கப்பட்டவர்களை, அவர்கள் மனந்திரும்பாமலும் அல்லது ஒப்புரவாகாமலும் இருந்தபோதும் தங்களோடு வரவேற்று சேர்த்துக் கொள்கிறார்கள்!*

*ஒரு நபரின்* **நித்தியமான நன்மையே** *நமக்கு மேலோங்கியதாய் இருக்க வேண்டியதே அல்லாமல், நம் சபையில் எண்ணிக்கையை பெருக்குவதாய் இருந்திடக்கூடாது!*

*– சகரியா பூணன்*

---

## ''ஏன் என்னை கைவிட்டீர்!'' புலம்பலில் ஜெயம் கண்டேன்!

***க****ர்த்தரை நேசித்து வாழ்ந்த என் ஜீவியத்தில், வெளியில் உள்ள போராட்டத்தை விட 'என் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டமே' மிகவும் பெரிதாயிருந்தது. எந்த பரிசுத்தவானுக்கும், தன்னைத் தீண்டுகிற சூழ்நிலையைக் காட்டிலும், அவனுடைய மனதில் எழும்பும் ஆவிக்குரிய போராட்டமே பெரியதாயிருக்கும்! என்ற உண்மையை நீங்கள் அறிந்து கொள்வது நல்லது.*

*அவ்வாறாகவே, என்னைத் தீண்டிய ஒரு சூழ்நிலை மிகப்பெரிய* **மனபோராட்டத்தை** *எனக்குள் ஏற்படுத்திவிட்டது! நான் கூறியதுபோல், சூழ்நிலையைக் காட்டிலும் என்னுடைய மனபோராட்டமே மிகப்பெரியதாயிருந்தது. இரண்டு வல்லமைக்கு எதிரான போராட்டமாகவே நான் அதைக் கண்டேன். அந்த இரண்டு சத்துவங்களும் ஒரே சமமாய் இருந்ததைப்போல் நான் கண்டதே, எனது மனகிலேசமாயிருந்தது. ஆகிலும், தேவத்துவத்தின் வல்லமையே*

*என் கண்களுக்கு முக்கியமாய் பிரகாசித்தது. அதற்கு எதிராய் இருந்த வல்லமையோ, எல்லோரும் எண்ணுவதைப்போல்* **'சாத்தான் அல்ல!' அது என் சுயத்தின் ஆர்ப்பரித்த வல்லமையேயாகும்.**

> **என் ஆவியில் படிந்த கறைகளும், முரட்டாட்டமான என் இருதயமும் தேவனுடைய வல்லமையை எதிர்த்து நின்றதே என் உள்ளத்திற்கு கொடிய துக்கத்தையும் வேதனையான கண்ணீரையும் தந்துவிட்டது!**

*என் இருதயத்தின் ஆழத்தில் உறைந்திருந்த விருப்பமோ "ஓ என் தேவனே உம்மை பிரியப்படுத்துவது ஒன்றே என்னுடைய மனவாஞ்சை. உம்முடைய உள்ளத்தை சோகமடைய செய்து விடுவேனோ? என்றே அஞ்சி நடுங்குகிறேன். எனக்கு இரங்கும்" என்றே கெஞ்சினேன்!*

*என்னை சஞ்சலப்படுத்திய பகுதியெல்லாம் "ஓ கர்த்தாவே, உம்மிடமிருந்து திராளான கிருபைகளையும் நன்மைகளையும் பெற்ற நான், அவைகளை இழக்கும்படியான சூழ்நிலை ஏற்படுவது எப்படி சாத்தியம்?" என்றே உள்ளம் குமறினேன். என் ஆண்டவரை அவ்வளவு அதிகமாய் நேசித்த எனக்கு, அவர் அருளின நன்மைகள் ஏராளம், நன்றியுள்ள இருதயத்தின் நிறைவிலிருக்கும் நான், இப்போதுள்ள எனக்கு எதிராய் எழும்பிய சுயத்தின் போராட்டத்தில்,* **உம்மீது கொண்ட நன்றியை இழந்த பாவியாய் நான் மாறுவேனோ?** *சுயம் இத்தனை வேகமாய் என்னை கவிழ்க்கப் பார்க்கிறதே? என உள்ளம் குமறினேன்! உம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட சமூகத்தாலும் அன்பாலும் தொடர்ச்சியாக உள்ளம் நிறைந்து வாழ்ந்த வாழ்க்கையை என்னால் வீணடிக்க கூடுமோ? இப்போதும் என் போராட்டத்தில், அன்று புறக்கணித்த மாயைகள், இன்று என்னைச் சூழ நின்று என் சுயத்தை ஆட்கொள்ள வருவது எப்படி சாத்தியம்?*

*ஓ தேவனே, எவ்வித கொடிய நிலையிலும் உம்மிடம் ஓடி வந்து ஆறுதலடைந்த எனக்கு, இப்போது முன்புபோல் ஜெபிக்க முடியாமலும், பரலோகமே எனக்கு பூட்டி வைத்ததைப்போலவும் எனக்குத் தோன்றுகிறதே? என் வேண்டுதலை எங்கே சொல்லுவேன்? யாதொரு ஆறுதலும் உம்மிடத்திலிருந்து வரவில்லையே? நான் ஏற்கெனவே வெறுத்து வாழ்ந்த இந்த பூமியையும் அதிலுள்ள யாதொன்றையும் எனக்கென்று 'ஆறுதலென' என்னால் இழுத்துக் கொள்ள கூடுமோ?*

> **ஓ தேவனே, என்னுடைய ஒரே மனகிலேசமெல்லாம் "கடந்த வருடங்கள் எல்லாம் அக்கினிமயமாய் இருந்த என் இருதயம், இப்போது குளிர்ந்த பனியைபோல் மாறுவது எப்படி சாத்தியம்?"**

*நான் உம்முடையவளல்லவோ.... இப்படி இருக்க, என் சுயத்தின் வலிமை சிருஷ்டிக்கப்பட்ட மாயையின் சத்துவத்தில் சிக்குண்டு, என் பழைய பாவங்களும் அதோடு சேர்ந்து கொண்டதாய், என் இருதயத்தின் பாரம் வெகுவாய் கூடிவிட்டதே! ஓ தேவனே, இவ்வளவு சுமை சுமந்திருக்கும் என்னை நீர் மன்னிப்பீரோ? நான் நரகத்திற்கே பாத்திரமாய் இருக்கிறேனே? நான் என்ன செய்வேன்? கர்த்தாவே, என்னை மீட்டுக்கொள்ளும். நீர் என்னை ஏற்றுக்கொள்ள, புனித பயணமோ அல்லது பொருத்தனைகளோ செய்வதற்கும் ஆயத்தமாய் உம்மிடம் தயங்கி கேட்கிறேன். என் கண்ணீர்கள் எனக்கு பானமாயும், என் துக்கமே என் உணவாயும் மாறிவிட்டதே! நான் சபையில் சென்று உட்கார்ந்தாலும் ஆறுதலில்லை! திருவார்த்தை பிரசங்கங்களையும் என்னால் கவனிக்க முடியவில்லை! என புலம்பினேன்.*

*இப்படி ஒரு வறண்ட பாதையில் நான் ஏறெடுத்த புலம்பல் வீணாகவில்லை.... அவர் என்னை புடமிட்டார்! இந்த புலம்பல் அனுபவமே, பிறகால வாழ்க்கைக்கு என் உள்ளத்தை கற்பாறையாய் மாற்றி விட்டது!*

**தன் குருவை மறுதலித்த பேதுருவும் இப்படித்தான் புலம்பியிருப்பாரோ? எனக்கு முன் சென்ற பரிசுத்தவான்களுக்கும் இதுபோன்ற புலம்பல் அனுபவம் ஏற்பட்டிருக்குமோ? என்ற என் கேள்விக்கு "இருந்திருக்கக் கூடும்!" என்ற பதிலே கிடைத்தது.**

*தெய்வ அன்பின் சத்துவத்திற்கு இணையான சத்துருவின் சத்துவம் என்னை மேற்கொள்ள ஒட்டாததற்கு ஒரே காரணம், நான் தேவனை அண்டிக்கொண்டு செய்திட்ட இந்த* **புலம்பல் விண்ணப்பமே** *காரணம், என்பதை அறிந்தேன். இந்த புலம்பல் அனுபவத்திலும் ஜெயம் கொள்ளச் செய்த தேவனுக்கே ஸ்தோத்திரம் உண்டாவதாக!*

*– மேடம் குயான்*

---

**சீர்கெட்ட நிலையை சுட்டிக்காட்டும், தீர்க்கதரிசிகள் தேவை!**

*"**யா**ருக்கு அதிகம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களிடமிருந்து அதிகம் கேட்கப்படும்" என்றே இயேசு கூறினார். இலட்சோப லட்ச மக்கள் 'வெளிச்சம் பெறாததினால்' இருளில் நடக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவத்தின் பாக்கியத்தில் பிரவேசித்து "வெளிச்சத்தைப் பெற்றவர்கள்" அந்த வெளிச்சத்தை 'தங்கள் சொகுசு வாழ்க்கையை வைத்தோ' அல்லது தங்கள் 'அஜாக்கிரதையான ஜீவியத்தைக் கொண்டோ' பெற்ற வெளிச்சத்தை, ஊதி அணைத்து விட்டார்கள். "இதோ கர்வமும், ஆகாரத் திரட்சியும்,*

*நிர்விசாரமுமே.... சோதோமின் அக்கிரமம்'' என எசேக்கியேல்.16:49 கூறுகிறது. வெளிச்சத்தைப் பெற்ற ஜனங்கள் வெளிச்சத்தை உதாசினம் செய்யும் இந்த வேளையில்தான் பரிசுத்தமான தேவ மனிதர்களும் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அவர்கள் பாவத்தைக் கண்டிக்க வேண்டியதாயிருக்கிறது. இன்றும், பரிசுத்தாவியானவர் தீர்க்கதரிசிகள் மூலமாய் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்.*

*கிதியோன் தரிசனம் பெற்றதைப்போலவே நாங்களும் 'தரிசனம் பெற்றோம்' எனகூறிக் கொள்வதில் எந்த பிரயோஜனமும் இல்லை.* **''செயல்.... செயல் ஒன்றே''** *சத்துருவின் கோட்டையை அசைத்திடச் செய்யும். நடுநிசியில் கிதியோன் காட்டிற்குள் சென்று பாகாலின் தோப்புகளை வெட்டி வீழ்த்தினான்! இந்த செயல் நரகத்தின் கோபத்தை சீறி எழச் செய்தது. யோவான் ஸ்நானகன் எழும்பி நின்று, கூடி இருந்த ஆசாரியர்களை 'விரியன் பாம்பு குட்டிகளே' என அழைத்தான்!*

**அவர்களின், ஏரோது ராஜாவின் வேசித்தனத்தை இந்த யோவான் கண்டித்தான். தேவ பக்தியில் சீறி எழுந்த இவனுடைய செயல், மரணதண்டனைக்கு வாசல் திறந்தது. காரிருள் சூழும் இந்த நாட்களில் தைரியமிக்க தீர்க்கதரிசிகளே இன்றைய தேவை!**

*மற்றொரு பக்கம் ''தனிநபர் ஆராதனை குழுவினர்''* (Cult Church) *தங்கள் பலத்தைக் காட்ட கன்வென்ஷன் கூடி வருகிறார்கள். எங்கள் இருப்பிடத்தின் அருகில் துர்உபதேச யெகோவா சாட்சியினர் 1,50,000 மக்களைக் கூட்டி 'நாங்கள் வளர்ந்து விட்டோம்' என கொக்கரித்து, உலகமெங்கும் தங்கள் ஸ்தாபகர்களை 'அபிஷேகித்து' அனுப்பு கிறார்கள். கிறிஸ்துவை மறுதலிக்கும் இந்த கூட்டத்தார், கிறிஸ்துவின் பெயரைக் கூறிக்கொண்டு ஜனங்களை ''இரட்டிப்பான நரகத்திற்குள்'' நடத்துகிறார்கள். இந்நிலையில் நம் தேசத்திற்கு என்ன வேண்டும்? அபிஷேகத்தில் அக்கினிமையமான தீர்க்கதரிசிகளே எழும்ப வேண்டும்!*

*கிறிஸ்தவம் என்ற பெயரில் கிறிஸ்துவை மறுதலிக்கும் மக்களையும் சபைகளையும், இந்த பூமி இனியும் தாங்கிக்கொள்ள போவதில்லை.*

***பரிசுத்தவான் சாங்ஸ்டர் கூறுவதைப்போல், மனந்திரும்புதல் ஆதிகாலத்தைப் போல் சரியாய் பிரசங்கிக்கப்பட வேண்டும்!***

*பரிசுத்தமாகுதல், மலைப்பிரசங்க மூலதனத்தை கொண்டிருக்க வேண்டும். இதைச் செய்திட துணிபவர்களே, தேவன் எழுப்பிய*

*தீர்க்கதரிசிகள்! பரத்திலிருந்து அந்த எழுப்புதல் வரும்போது, துர்உபதேசங்களால் பல காலமாய் கட்டப்பட்ட மாளிகைகள் சிதறுண்டு போய்விடும். வேதாகமத்தை புரட்டி, புரட்டி கள்ள உபதேசத்தால் மாயையான வீடுகளை மணலில் கட்டியவர்களும், கட்டப்பட்ட அந்த வீடுகளும் பரிசுத்தாவியின் சீற்றத்தில், நொடிப்பொழுதில் சாய்ந்துவிடும். இதற்கு தேவையாயிருப்ப தெல்லாம் ஆங்காங்கு தேவன் எழுப்பும் தீர்க்கதரிசிகளேயாவார்! தங்கள் வேத அறிவினால் உப்பிய தலை கொண்டு, நெஞ்சில் நோவுகொண்டு சுருங்கிப் போனவர்கள், 'இயேசுவின் இரத்தத்தை' அசட்டை பண்ணும் துர்உபதேசம் நிலைநிற்கலாகுமோ? அவர்களின் மதியீனம் நிச்சயமாய் வெளிச்சத்திற்குள் வரும். இன்று தேவை என்ன? மற்றொரு உபதேசம் அல்ல..... சீர்கெட்ட நிலையை சுட்டிகாட்டும், ஆவியில் தைரியம் கொண்ட தீர்க்கதரிசிகளே இன்று தேவை!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## பரிசுத்தாவி "கற்பு ஒழுக்கத்திற்கு" அக்கினியானவர்!

**"தே**வனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப் பீர்கள்" என ரோமர்.8:9 கூறுவதைப் பாருங்கள். பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்தாவி 'அக்கினி ஜூவாலையாய்' இருந்தது. அப்படி இருந்தும், அந்த அக்கினியை உதாசினம் செய்துவிட்டு "ஆவியின் பிரசன்னம்.... ஆவிக்குரிய ஆராதனை" என்றெல்லாம் மதி மயக்கும் வார்த்தைகளை சபைகளில் காண்பது, ஆவியானவருக்கு செய்திடும் துரோகம் என்றே சொல்ல வேண்டும். பரிசுத்தாவி வெளிப்படுத்தும் அக்கினி "கற்பு நெறி கொண்ட அக்கினியே" ஆகும். ஏதோ ஒரு பேச்சிற்காக 'பரிசுத்த' ஆவி என அவர் அழைக்கப்படவில்லை. பரிசுத்தத்திற்கு ஆழமான மகிமை உள்ளது உண்மைதான்! **ஆனால், பரிசுத்தாவியின் உடனடி பிரவேசம் 'கற்பின் தூய்மையே' ஆகும்.** பரிசுத்தாவி, தேவனாயிருக்கிறபடியால், கறைதிரை அற்ற மாசில்லாத தூய்மை உடையவர். பரிசுத்தாவியை பெற்ற எந்த மனுஷனும், தன்னில் மறைந்திருக்கும் அழுக்கான, எந்த கற்பு ஒழுக்கக்கேட்டையும் தன் இருதயத்திலிருந்து வெளியேற்றி விடுவான்.

"உண்மை கிறிஸ்தவர்கள்" என பெயர் பெற்ற எந்த சபையின் அஸ்திபாரமும், கற்பு ஒழுக்கத்தின தூய்மையில் அடங்கியிருக்கிறது. உங்கள் ஜீவியத்திலோ அல்லது சபையிலோ கற்பு ஒழுக்க தூய்மை

*இழந்து பாவம் வாசம் செய்தால், நீங்கள் கொண்டிருக்கும் எந்த மகிழ்ச்சிக்கும், எந்த ஆர்ப்பரிக்கும் ஆராதனைக்கும் ஒரு துளியும் மதிப்பு இல்லை!*

***சில கூட்ட மக்கள், நாங்கள் பெற்றிருக்கும் ஆவிக்குரிய அனுபவங்கள் ஏராளம் எனக்கூறி, கிறிஸ்தவ அடித்தளமான 'கற்பு ஒழுக்கத்தை' உதாசினம் செய்யப்பார்க்கிறார்கள். இதுபோன்றவர்களை, இதுபோன்ற சபையினரை "துணிகர பாவம் கொண்டவர்கள்" எனக்கூறுவதே பொருத்தமாகும்!***

*"நீங்கள் பரிசுத்தராயிருங்கள்" என்ற அழைப்பு சர்வ வல்ல கர்த்தரிடமிருந்து வெளிப்பட்ட சீரியஸான கட்டளையாகும். சொல்லப்போனால், இந்த முழு உலகத்திற்கும் கொடுக்கப்பட்ட கட்டளை! ஒரு உண்மை கிறிஸ்தவனின் உயர்ந்த கோட்பாடு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்பதில்லை! மாறாக, பரிசுத்தரா யிருங்கள்! என்றே அழைக்கப்பட்டிருக்கிறோம். அதாவது "கற்பு நெறிகொண்ட" பரிசுத்த இருதயம் கொண்ட கிறிஸ்தவனிடத்தில் மாத்திரமே, பரிசுத்தாவியானவர் தங்குகிறார். எது பரலோக இராஜ்ஜியம்? இந்த பரிசுத்தாவி வழங்கிடும் 'சந்தோஷமே' பரலோக இராஜ்ஜியம்!*

*– A.W.டோசர்*

---

**சாது சுந்தர்சிங்கின், தாழ்மை துளிகள்!**

*__சு__ந்தர் சிங், பூனா நகரத்தில் உள்ள மராத்திய மக்களிடமும் பிரமாண மக்களிடமும் ஊழியம் செய்தார். சுமார் 300 புருஷர்களும், ஸ்திரீகளும் அவருடைய செய்திகளைக் கேட்டார்கள். அவரது செய்தியின் தலைப்பு "**இன்றைக்கே இரட்சண்ய நாள்**" என்பதாகும். சாதாரணமாய் கூடி வந்த மராத்திய மக்கள், சிறிது நேரத்தில் பேரார்வத்தோடு கேட்கத் தொடங்கினார்கள். கூட்டத்தின் முடிவில் சில அநேக பிரமாண புருஷர்கள் எழுந்து நின்று "நாங்கள் கிறிஸ்துவைப்பற்றி கடந்த 20 ஆண்டுகளாக ஐரோப்பா மிஷனெரிகள் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இன்றுதான் உங்கள் பிரசங்கத்தின் மூலமாக "இயேசுவே மெய்யான இரட்சகர் என விளங்கிக்கொண்டோம். அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கிறோம்" என அறிக்கை செய்தார்கள்!*

*அன்றைய தினம் பூனாவின் "புனித ஜான் சொசைட்டி" தலைவராயிருந்த திரு. டேவிட், தேநீர் விருந்திற்கு சுந்தர்சிங்கை அழைத்தார். அங்கு குழுமி வந்த கிறிஸ்தவர்கள் நடுவே டேவிட்*

*எழுந்து நின்று "சுந்தர் சிங் அவர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்கு ஆற்றும் பணி ஒப்பற்றது என அறிவேன்! ஆகிலும், உங்களை மற்றவர்கள்* **சாது அல்லது புனிதர்** *என அழைப்பதற்கு ஏன் இடம் தருகிறீர்கள்?" என கேட்டார்.*

*அதற்கு சுந்தர் சிங் எழும்பி நின்று "ஜனங்கள் என்னை சாது என அழைப்பதை நான் ஒருநாளும் விரும்பியதில்லை. அவர்கள் என்னை 'சுந்தர்சிங்' என மாத்திரம் அழைத்தால் மிக்க மகிழ்ச்சி அடைவேன். இருப்பினும், நான் அவர்களை விட வித்தியாசமாய் உடை உடுத்துவதால்,* **அன்பினிமித்தம் என்னை 'சாது' என்று அழைக்கிறார்கள்** *என்றே எண்ணுகிறேன். நீங்கள் கூறுவதுபோல் சாது என்ற வார்த்தைக்கு 'புனிதர்' என்று அர்த்தமில்லை. சாது என்ற பெயருக்கு அர்த்தம் "சாதனாவை பின்பற்றுபவன்" என்றே அர்த்தம்! அதாவது* **தெய்வீக பிராத்தனையும் தியானமும் கொண்டவன்** *என்பதுதான் அதன் பொருள்" என விடை கூறி அமைதியாய் அமர்ந்துவிட்டார்.*

*மற்றொரு சமயம் பஞ்சாப் மாநிலத்திலுள்ள ரத்தினகிரியில் ஒரு விசேஷ கூட்டத்தை அந்த நகரத்தின் வழக்கறிஞர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்கள் குடும்பத்துடன் கூடி வந்தனர். கூட்டம் முடிந்ததும் சுமார் 300 வழக்கறிஞர்கள் அவருக்கு முன்பாக தாழ விழுந்து கும்பிட்டார்கள். உடனே சுந்தர் சிங் "இவ்வாறு நீங்கள் செய்வது தவறு" என கூறி அவர்களை எழுந்திருக்கச் செய்தார்.*

*கூடி இருந்த தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை நிறுத்தி, சுந்தர்சிங்கின் காவி உடையின் ஓரத்தை பிள்ளைகளின் தலைகளில் வைத்தார்கள். சிலர் மிகுந்த பயபக்தியுடன் சாது உடுத்திய அங்கியின் ஓரத்தை தொட்டார்கள். இதையெல்லாம் கவனித்த, அங்கு மிஷனெரியாக நியமிக்கப்பட்ட ஊழியர் அவரிடம் வந்து "ஜனங்கள் இப்படியெல்லாம் உங்களுக்கு மரியாதை செலுத்துவதை ஏன் அனுமதிக்கிறீர்கள்?" எனக் கேட்டார்.*

*அதற்கு சுந்தர்சிங் "இவ்வாறு கனம் செய்வதை நானும் விரும்பவில்லை. என்மீது கொண்ட அன்பினால் செய்திருக்கக்கூடும்" என பதில் கூறினார். அதற்கு அந்த மிஷனெரி "கிறிஸ்துவே கனத்திற்குரியவர், நீங்கள் அல்ல" என சற்று முகம் சுழித்தார்! அதற்கு சுந்தர்சிங், சிறிதும் தாமதிக்காமல் "மதிப்பிற்குரிய ஊழியர் அவர்களே இந்த ஜனங்கள் எனக்குத் தந்த மரியாதையை ஏற்றுக்கொண்டதற்கு ஒரு காரணம் உண்டு. என் அருமை ஆண்டவர் இயேசு, ஒரு சமயம் எருசலேம் வீதியில், ஒரு கழுதையின் மீது அமர்ந்து பவனி சென்றார். ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை எடுத்து அந்த வீதியில் விரித்து*

*வைத்தார்கள்! அந்த வஸ்திரத்தின் மீது நடந்து சென்றது கழுதைதான், இயேசு அல்ல!* **அந்த கழுதை இயேசுவை சுமந்து சென்றபடியால் கனப்படுத்தப்பட்டது. நான் அந்த கழுதையைப் போன்றவன்!** *ஜனங்கள் என்னை மதிப்பது, என்னிமித்தம் அல்ல! நான் கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதால் அவ்வாறு செய்கிறார்கள், அவ்வவுதான்!"* என பதில் *கூறினார். சுந்தர்சிங்* **சாது** *என அழைக்கப்பட்டதற்கு, அவர் கூறிய காரணம் ஒன்றாக இருந்தாலும், ஜனங்கள் அவரிடம் கண்ட* **'தெய்வீகமான தாழ்மையே'** *அவர்களை 'சாது' என அழைக்கச் செய்தது.*

*– சாது சுந்தர்சிங்*

---

## உத்தம சபையில் 'ஊட்டின கை கடிப்பது' தகுமோ?

***நா****ன் ஊழியம் செய்த சபையில், சபை வளர்ச்சிக்கு கைகொடுக்கும் நல்ல சகோதரர்கள் இருந்தார்கள். சபையை தங்கள் குடும்பமாய் எண்ணி, அதற்கு சேதம் உண்டாகுவதை மறுத்து நிற்பார்கள்! அதுபோன்ற ஒரு சகோதரன், தானும் தன் குடும்பமும் பக்தியாய் வாழ்வதினிமித்தம்* **சபையின் போதகங்களுக்கும், சபை போதகருக்கும் நன்றியுள்ளவராயிருப்பார்.** *தன் சாப்பாட்டு மேஜையில், தன் குடும்பத்தாரில் ஒருவர் கூட பிறரை தீங்கு பேசுவதற்கு அனுமதிக்காதது மாத்திரமல்லாமல், சபையையோ அல்லது சபையிலுள்ள சகோதர சகோதரிகளையோ தீது பேச நிச்சயமாய் அனுமதிக்கவே மாட்டார்!! அதனிமித்தம் அவரும், அவருடைய பிள்ளைகளும், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள்!*

*தீது பேசாத அந்த நல்ல ஆவியை உடைய சகோதரர், தீது பேசும் ஆவிக்குரிய நோய் கொண்ட சகோதரர்களை தூக்கி எடுத்து சுகப்படுத்தவும் செய்தார். பிற்காலத்தில் அதை நான் கேள்விப்பட்டு அவருக்காக கர்த்தருக்கு நன்றி கூறினேன்.*

> **சாதாரண கல்வி சாலையில் கூட "போதக பக்தி அல்லது குருபக்தி வேண்டும்" என எங்களுக்கு சொல்லி கொடுத்திருக்கிறார்கள். தன் போதகரை அல்லது குருவை தீது பேசுகிறவர்கள் "ஊட்டிய கையை கடிப்பவர்கள்" என்ற பட்ட பெயரும் அந்நாளில் உண்டு. இந்த பொதுவான இறைபக்தி குணம் கூட சபையிலுள்ள ஒரு சிலர் இழந்திருப்பது துயரம்!**

*சபையையோ, சபை போதகத்தையோ, சபை போதகரையோ முகாந்திரம் ஏதுமில்லாமல் தீது பேசுகிற சகோதரர்களிடம்: "சகோதரரே இவ்வாறு நீங்கள் சபையை தீது பேசி மற்றவர்களையும் கெடுப்பது நல்லதல்ல. தாயின் வயிற்றில் இருக்கும் கரு சுகமாய்*

பிறந்திட நீங்கள் குறைகூறும் நம் போதகர் உங்களுக்காக ஜெபித்தார் அல்லவோ? பிறந்த குழந்தையை தன் கையில் ஏந்தி பிரதிஷ்டை செய்தாரல்லவோ? பாலிய பருவத்தில் மனந்திரும்புதலைப் போதித்து இரட்சிக்கப்பட உதவி செய்தார் அல்லவோ? இரட்சிக்கப்பட்ட உங்களை திருமுழுக்கு செய்தாரல்லவோ? கர்த்தருடைய பந்தியில் அமர வைத்து கிறிஸ்துவின் சரீரமாய் இணைத்தாரல்லவோ? தன் ஜீவனை தந்து, ஆவிக்குரிய வளர்ச்சி தந்திட பாடுபட்டார் அல்லவோ? உன் நிச்சயதார்த்தத்தையும் உன் கல்யாணத்தையும் ஏற்ற துணைகொண்டு நடத்தி வைத்தாரல்லவோ? கஷ்ட நஷ்ட நேரத்தில் கூப்பிட்ட போதெல்லாம் விரைந்து வந்து ஜெபித்து ஆறுதல் செய்தாரல்லவோ? நீ மரிக்க நேரிட்டாலும் 'கர்த்தருக்குள் நித்திரையை' கனமுள்ள அடக்கமாய் செய்பவரும் அவர்தானே?

....இவ்வாறு முதலிலிருந்து கடைசி வரை சகல ஆவிக்குரிய காரியங்களையும் உனக்காக நடத்தி பிரயாசப்படும் **'ஞான தகப்பன்மார்களுக்கு' விரோதமாக எழும்புவதும், பேசுவதும் சரியா?**" என்று கேட்பார். இவருடைய நல்ல மாதிரியான, அடக்கமான அதே சமயம் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்கும் சகோதரர்கள் போதகரிடம் திரும்பி வந்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்டிருக்கிறார்கள். அதில் மனம் நெகிழ்ந்துபோன போதகர்கள், அவர்களை மனதார மன்னித்தது மல்லாமல், இவ்வாறு **திருத்துவதற்கு அவர்களை தூக்கி எடுத்த** சகோதரர் களுக்காக பெருமிதம் கொண்டார்கள்!

போதகர்களை நேசித்து, ஊழியத்தில் உறுதுணையாய் நின்றவர்கள், கர்த்தரால் ஆசீர்வாதம் பெறுகிறார்கள் என்பதும், அவர்களைப் பகைத்து, மனங்கலங்க வைத்து, ஊழியத்துக்கு இடையூறு செய்கிறவர்கள், கர்த்தரால் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதும் ஆதி சபை மக்கள் திட்டமாய் அறிந்த விஷயம்!

குடிப்பது, கலகம் செய்வது, திருடுவது போன்ற குற்றங்களை சர்க்கார் தண்டிக்க முடியும். ஆனால் அவர்களை தெய்வ பக்தர்களாய், இறைவழியில் நடத்துவது அவர்களுடைய பொறுப்பல்ல. கிறிஸ்துவுக்குள் ஒருவனை நற்சீர்படுத்தி, கிறிஸ்து அவனுக்குள்ளும் சபைக்குள்ளும் வெளிப்பட பிரயாசப்படும் ஒரு சபை உங்களுக்கு இருந்தால் அதை பாக்கியம் என்று எண்ணுங்கள். **நன்றி உள்ளம் தவிர** தீதொரு வார்த்தையும் பேசிவிடாதிருங்கள்! அப்போது நீங்களும் உங்கள் குடும்பமும் மாத்திரமல்ல, சபையும் சபையின் குடும்பங்களும் கிறிஸ்துவின் ஆவியில் கட்டப்பட்டு ஓங்கி வளரும்! அல்லேலூயா.

– பரமானந்தம் ஐயர்

## ‘இடைவிடாத’ அபிஷேகம் வேண்டும்!

*தங்களை B.E என்றோ அல்லது M.B.B.S என்றோ, பல்வேறு உத்தியோக அந்தஸ்தை வைத்து ஜனங்கள் மகிழ்ந்திருக்கிறார்கள். ஏனெனில், அது அவர்களுக்கு இந்த பூமியில் நிரந்தர அந்தஸ்தாயிருக்கிறது. நானோ, கிறிஸ்துவுக்குள் நிரந்தர அந்தஸ்தைப் பெற்றிருக்கிறேன்: “நான் இரட்சிக்கப்பட்டேன்! நான் சுத்திகரிக்கப் பட்டேன்! நான் பரிசுத்தாவியின் அபிஷேகம் பெற்றேன்!” ஆகிய இவைகளையே நம் அந்தஸ்தாய் கொண்டிருக்க தேவன் விரும்புகிறார்.*

*இடைவிடாத அபிஷேகத்தின் நிரந்தர அந்தஸ்தை பெற்றிருந்த யோவானின் சரித்தரத்தைப் பாருங்கள். அவரை அழிக்க கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் தூக்கி எறிந்தார்கள், திரளான மக்கள் மத்தியில் பல ரூபத்தில் அவரை அழிக்க முயன்றார்கள், பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டார்!*

**இது நடந்தாலோ, அல்லது எது நடந்தாலோ, ஆகிய அனைத்திலும் யோவான் ஆவிக்குள்ளாய் நிறைந்திருந்தார். நீங்கள் இந்த இரகசியத்தை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் துணி துவைத்து கொண்டிருக்கும்போதும் ஆவியில் நிறைந்திருக்க முடியும்! தரையை சுத்தம் செய்து கொண்டிருக்கும்போதும் ஆவியில் நிறைந்திருக்க முடியும்!**

*சைக்கிளில் கடைக்குச் செல்லும்போதும் ஆவியில் நிறைந்திருக்க முடியும்! இவ்வாறு எல்லா சூழ்நிலைகளிலும், எப்போதும் நீங்கள் ஆவியில் நிறைந்திருக்க முடியும்! ஆவியில் நிறைந்திருக்கும் ஆதாரம் என்னவெனில் “எங்களை அன்பு கூருகிறவராலே” (ரோமர்.8:37) என்ற அன்பின் நிரந்தமான தொடர்ச்சியேயாகும்!*

**என்ன நடந்தால் என்ன? கர்த்தர் எங்களை அன்புகூருகிறார்** *என்பதே ரோமர்.8:37 - ம் வசனத்தின் இரகசியம். நீங்கள் என்னைப் பார்த்து “உங்கள் கர்த்தரைக் குறித்து வெகு ஆச்சரியமான ஒரு செயலை கூறுங்கள்?” என கேட்டால்: மகிழ்ச்சியுடன் நான் கூறும் ஒரே பதில் “என்னை, எங்களை முடிவுபரியந்தம் அன்புகூர்ந்தார்” என்ற செய்தியே ஆகும்! (யோவான்.13:1). இந்த உண்மையை நீங்களும் மாறுத்தரமாய் பிரதிபலித்து “கர்த்தர் மெய்யாகவே எங்களை முடிவுபரியந்தம் அன்புகூருகிறார்!” என கூறுவீர்கள் என்றே ஆண்டவர் நம்மீது அளவில்லாத விசுவாசம் வைத்திருக்கிறார். இப்போது சொல்லுங்கள்: “நாம் இடைவிடாது அபிஷேகம் பெற்று வாழ்வது நன்மை அல்லவா? நாம் பெற்ற சிலாக்கியம் அல்லவா?”*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

## ‘சாதாரண வேலையும்’ ஆவிக்குரிய ஊழியம் என கண்டேன்!

*என்னுடைய டோனாவூர் ஆசிரமத்துப் பிள்ளைகள் எல்லோருக்கும் தேநீர் போட்டுத்தர அன்று யாரும் இல்லை. அந்த நேரத்தில் சுவையான தேநீர் போடக்கூடிய ஒரே நபர் நான்தான்! அடுப்பு அறையில், தேநீர் தயாரிப்பதற்குரிய எல்லா பொருட்களும் தயாராயிருந்தது. ஆனால் தேநீர் தயாரிக்கக்கூடியவர்கள் அங்கு இல்லை. தேநீர் போடுவதற்கு என் கால்கள் முன் செல்ல மறுத்தன. “இதை எல்லாம் நான் செய்யத் தொடங்கினால், என் ஆவிக்குரிய தன்மை கெட்டுவிடும்! எனக்கு தரப்பட்ட ஊழியம் ஆவிக்குரிய ஊழியமே அன்றி, தேநீர் போடும் வேலை அல்ல!” என என் உள்ளம் முரண்டு செய்தது.*

*ஆவிக்குரிய ஊழியம் தவிர ஆசிரமத்திலுள்ள வேறெந்த பணியும் ‘வெறும் வேலை’ என்று எண்ணிய என்னுடைய எண்ணத்தை ஆவியானவர் கடிந்து கொண்டார். உண்மையில் “எனக்குப் பிரியமானதைச் செய்வதை” ஆவிக்குரிய வேலை என எண்ணியது மதியீனம் எனக் கூறினார்.* **நான் உடனே அடிபணிந்து “ஆண்டவரே, உம்முடைய ஜனத்திற்கு, எனக்குப் பிரியமில்லாததைச் செய்திடும்” தாழ்ந்த பணிவிடை ஆவியை அடியாளுக்கு தந்தருளும்!** *இதுவே கல்வாரியின் மெய்யான அன்பு என்பதை அறியாதிருந்தேன், இப்போது உணர்ந்து கொண்டேன்! எனக்கூறி, துரிதமாய் அடுப்பறையில் தேநீர் தயாரிக்கும் பணியைத் துவங்கினேன்.*

*அடுப்பறையில் பாதி வேலை செய்து கொண்டிருக்கும்போது, பணிவிடை பெண்கள் உள்ளே வந்ததும், உடனே விட்டு விட்டு போகலாம் என எண்ணினேன். அச்சமயம் “ஒரு வேலையில்* **தரித்திருக்க முடியவில்லையென்றால்**” *உன்னிடம் கல்வாரி அன்பு இல்லை என்ற ஆவியானவரின் குரல் கேட்டவுடன், அந்த தேநீர் தயாரிக்கும் பணியை முழுவதுமாய் செய்து முடித்தேன்! அதேசமயம் கல்வாரி அன்பின் பெருவெள்ளம் என் உள்ளத்தை நிறைத்தது கண்டு, பேரானந்தம் கொண்டேன்!*

*‘தெய்வ அன்பே’ என் ஜீவியத்தின் தூண்டுகோலாய் எப்போதும் இருந்தது! இந்த அன்பே, நான் ஒவ்வொரு நாளும் சிலுவையில் அறையப்பட ஏவியது! தேவன் தந்த, டோனாவூர் மக்களுக்காக, அல்லது என் சகோதரனுக்காக “என் ஜீவனை சந்தோஷமாய் கொடுக்க” ஏவுகின்ற அனைத்தையும் கல்வாரி அன்பாக அணைத்துக் கொண்டேன்!*

*– ஏமி கார்மைக்கேல்*

## ‘எதிர்பார்க்கும் சுயம்’ சிலுவையில் அறையப்பட வேண்டும்!

*கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளமான பஞ்சங்கள்! கொள்ளைநோய்! பூமியதிர்ச்சி..... போன்றவைகளைவிட, இயேசு வலியுறுத்தி கூற விரும்பியதெல்லாம்* “**அக்கிரமம் மிகுதியாகி, அன்பு தணிந்துபோவதையே**” *நம்மை அதிர்ச்சிப்படுத்தும் அடையாளமாய் எச்சரித்தார்! (மத்.24:12). ஏனெனில் மற்ற அடையாளங்கள் ‘வெளியே தோன்றும்’ அடையாளங்கள்! அன்பு தணிவது நமக்கு ‘உள்ளே தோன்றும்’ அடையாளமாயிருக்கிறது!*

*அக்கிரம மிகுதி பல ரூபமாயிருந்தாலும், தெய்வ அன்பிற்கு விரோதமானதையே ‘அக்கிரமம்’ என இயேசு குறிப்பிட்டார்! “சினேகிப்பவர்களையே சினேகிப்பது” தெய்வ அன்பு அல்ல! அது மானிட அழியும் அன்பு! தெய்வ அன்போ, பாவியாகிய நம்மை அன்புகூர்ந்து “தன்னைத் தந்தருளி” இவ்வளவாய் நம்மை அன்புகூர்ந்த தேவனுடைய அன்பு! (யோவான்.3:16).* **அந்த அன்பில், யாதொரு ‘எதிர்பார்ப்பும்’ (Demand) இல்லை!** *ஆனால் இதற்கு நேர்மாறாக, கணவன் மனைவி தொடங்கி, சபையிலுள்ள சகோதர சகோதரிகள் வரை, ஒருவருக்கொருவர் கௌரவத்தை அல்லது மரியாதையை அல்லது வேறு பல காரியங்களை முன்வைத்து ‘எதிர்பார்ப்பதினால்’* (Demand) *ஏற்படுவதே அன்பின் தாழ்ச்சியாயிருக்கிறது! சுய கௌரவம், சுய மரியாதை, சுய உரிமை, ..... போன்ற நமது அனைத்து எதிர்பார்ப்பு களையும் தொகையிட்டு,* “**சுய சித்தம்**” *என்றே ஆண்டவர் கூறினார்!*

**ஆகவே, எதிர்பார்க்கும் இந்த “சுய விருப்பத்தை” வெறுத்து, சிலுவை எடுப்போர் மாத்திரமே இயேசுவைப் பின்பற்றிவரும் மெய் சீஷர்கள்! அவர்களே இந்த ‘அக்கிரமத்தை’ சிலுவையில் அறைந்து ஒருவரோ டொருவர் கொண்ட தெய்வ அன்பில் நிலைத்திருப்பார்கள்!**

*ஒரு வேலைக்காரன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்! ஆனால், ஒரு அடிமை ‘கூலி கூட’ எதிர்பார்த்திட முடியாது! வயலுக்கு கூலிபேசி வந்த வேலைக்காரனைவிட, எந்த கூலியும் எதிர்பாராமல் பணிசெய்ய வந்தவர்களையே இயேசு உயர்த்திப் பேசினார் (மத்தேயு.20:13,14). நம் எஜமானாய் வந்த இயேசு, யாதொன்றும் எதிர்பாராத* **இந்த அடிமையின் ரூபத்தையே** *தெரிந்து கொண்டார்! (பிலிப்பியர்.2:7).*

*எதைச் செய்தாலும்* **‘கூலி’ எதிர்பார்க்கும்** *மனப்பான்மையைத் தாண்டி, ‘ஓர் அடிமையின்’ சிந்தைக்குள் தன் சீஷர்களும் வர, இயேசு*

*பெரிதும் விரும்பினார்! அவர் சொன்ன ஒரு உவமையில் வரும் 'கூலி எதிர்நோக்கும்' வேலைக்காரர், எவ்வாறு 'யாதொன்றும் எதிர்பாராத அடிமையாய்' மாறினர்? என்பதை விவரித்தார். இந்த உலகில் உள்ள அனைவருமே 'எதிர்பார்க்கும்' வேலைக்காரர்களாய்தான் இருக்கிறார்கள் என்பது இயேசுவுக்குத் தெரியும்! ஆகவே, அந்த உவமையில் வரும் வேலைக்காரன் பாத்திரத்திற்கு தன்னையே வைத்துப்பேசினார்! இவ்வாறாக தன் "***கிறிஸ்துவின் சிந்தையை***" நாமும் பெறும்படி வழிவகுத்தார்! (லூக்கா.17:7-10).*

*இந்த உவமையை விவரித்த இயேசு, தன் வயலில் கடுமையாய் வேலைசெய்து திரும்பிய அந்த வேலைக்காரனிடம் "களைத்து வந்திருக்கும் நீ போய் சாப்பிடு!" என்று எஜமான் சொல்வானோ? என கேட்க.... மானிடராகிய நாம் அனைவருமே, "ஆம்" என்று பதில் கூறியிருப்போம்! ஆனால், இயேசுவோ "அப்படி அவன் சொல்லமாட்டான்!" என, எதிர்பார்க்கும்* (Demand) *குணாதிசயத்தை மறுத்து கூறினார்! இப்போது, அந்த வேலைக்காரன் சமைத்து முடித்ததும் "நீதான் களைத்துப்போய் இருக்கிறாய்! நீ முதலாவது உணவு அருந்தி, பின்பு எனக்கு கொடு" என்று கூறுவார் என எதிர்பார்த்த குணாதிசயத்தை, இயேசு மறுத்து, "இல்லை, முதலாவது எனக்கு பணிவிடை செய்து, பின்பு மிச்சம் உள்ளதை சாப்பிடு" என்றே அவன் கூறுவான்! என,* **தன் "எதிர்பாராத (No Demand) சிந்தையை"** *வெளிப்படுத்தினார்! இத்தனைக்கும் பின்பு, அந்த எஜமான் சாப்பிட்டு முடிந்ததும், "நன்றி" என கூறுவானோ? எனக்கேட்டு, அதற்கு அனைவருமே "ஆம், நன்றி கூருவான்!" என.....*

**குறைந்தது நன்றியாவது சொல்லுவான் என எண்ணிய நம் யாவருக்கும், 'மீண்டும் அந்த எதிர்பார்ப்புக்கு' இயேசு 'மரண தண்டனை' வழங்கினார்!**

*"நான் எண்ணுகிறேன், அப்படி அவன் நன்றி சொல்லியிருக்க மாட்டான்" என கூறிவிட்டார்! நீங்களும் அவ்விதமே "அப்பிரயோஜனமான ஊழியர்களாய்" இருங்கள்! அல்லது கூலி எதிர்நோக்காத,* **நன்றிகூட எதிர்பார்க்காத "அடிமைகளாய்" இருங்கள்!** *என அறைகூவல் விடுத்தார்! 'யாதொருவரிடமும்' 'யாதொன்றும்' எதிர்பார்க்காத சிலுவை பாதை,* **அன்பின் பரலோகம்***! அப்படி இல்லையெனில், ஒருவருக்கொருவர் 'எதையோ எதிர்பார்த்து' வாழும் ஜீவியம் 'ஒருவருக்கொருவர் பட்சித்துக்கொள்ளும்'* **நரக வாழ்க்கை***! என அறிந்து, நம் குடும்பத்திலும் சபையிலும் விழிப்புடன் வாழக் கடவோம்!!*

*– T.ரத்தினகுமார்*



# யாக்கோபு அப்போஸ்தலன்,

## இயேசு பருகிய பானம் பருகியவன்!

(AD 44)

செபெதேயுவின் குமாரர்களாகிய யோவான் யாக்கோபுவின் தாய் சலோமி, இயேசுவை பணிந்துகொண்டு, ஓர் விண்ணப்பம் கேட்டாள். இயேசுவும் "உனக்கு என்ன வேண்டும்?" என கேட்டபோது, "யாக்கோபும் யோவானும், உமது வலது பாரிசத்திலும் மற்றொருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திட" வேண்டி கேட்டுக் கொண்டாள். அதற்கு இயேசு "நான் குடிக்கும் பாத்திரத்தில் இவர்களும் குடிப்பார்களா?" என கேட்டபோது அவர்கள் அனைவரும் "கூடும்" என்றார்கள்!

இயேசு உயிர்த்தெழுந்த சில வருடங்களுக்குப் பிறகு 'ஏரோது அகிரிப்பா ராஜா' தேசத்தில் கிறிஸ்தவம் பெருகி வருவதைக் கண்டு அதிக கோபம் அடைந்தான். அப்போஸ்தலரையும், கிறிஸ்துவை பிரசங்கிக்கும் தலைவர்களையும் கொன்றுவிட தீர்மானித்தான். அச்சமயத்தில் 'ஒரு மனிதன்' அப்போஸ்தலனாகிய யாக்கோபின் இருப்பிடத்தை ராஜாவிடம் வஞ்சகமாய் காட்டி கொடுத்துவிட்டான். யாக்கோபு கைது செய்யப்பட்டு, ராஜாவினால் 'தலை வெட்டப்படும்' மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

யாக்கோபின் தலை வெட்டப்படும் இடத்திற்கு, வீரர்கள் இழுத்துச் சென்ற நேரத்தில், அவரை காட்டிக்கொடுத்தவன் **யாக்கோபின் சொல்லி விளங்காத தைரியத்தையும், பிரகாசமான சந்தோஷத்தையும் கண்டு உள்ளம் உடைந்தான்.** "கிறிஸ்துவுக்கென்று இத்தனை வைராக்கியமா?" என்ற எண்ணம் அவனை உந்தித்தள்ள, ஊர்வலத்தின் நடுவே சென்று யாக்கோபின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்டான். மேலும், "நான் இன்று முதல் கிறிஸ்தவன்! இயேசுவைப் பின்பற்றி நடப்பேன்" என உரத்த சத்தமாய் கூறியதும், போர் வீரர்கள் அந்த மனிதனை கைது செய்தார்கள். யாக்கோபு அந்த மனுஷனை திரும்பி பார்த்து "என் சகோதரனே உனக்கு சமாதானம் உண்டாவதாக!" எனக்கூறி தன் அருகே அவனை வரக் கூறி, முத்தம் கொடுத்தான்! காட்டிக்கொடுத்த அவனும் தைரியம் கொண்டு புன்முறுவல் பூத்து "நீங்கள் மாத்திரம் இந்நாளில் கர்த்தராகிய இயேசுவால் முடிசூட்டப்படாமல், நானும் உங்களோடு மரித்து முடிசூட்டப்படுவேன்" எனக் கூறியதும்.... அடுத்த சில வினாடிகளில் இருவருடைய தலையும் சேர்ந்து வெட்டப்பட்டது!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## ஓ வாலிபனே! உன் அந்தரங்கம் கர்த்தர் அறிவார், மனந்திரும்பு!!

நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில் என் அருமைத் தாயாரை ஏமாற்றிப் பக்கத்து கிராமத்தில் சினிமா பார்க்கச் சென்ற அந்த நாள் என் நினைவிற்கு வருகின்றது. "சினிமாவை நாம் ஒருக்காலும் பார்க்கக்கூடாது" என்று என்னிடம் கூறின என் தாயாரிடம் "அம்மா, சினிமா பார்க்கக்கூடாது என்பது சரிதான். ஆனால் நான் பார்க்கப்போகின்ற படம் எனது பள்ளிப்பாட சம்பந்தமான அறிவு வளர்ச்சிக்குரியது" என்ற என் ஏமாற்று வார்த்தைகள் எனது பட்டிக்காட்டுத் தாயாரிடம் நன்கு செல்லுபடியாயிற்று!

பரிசுத்த வேதாகமம் "ஒருவரையொருவர் ஏமாற்றிய" சந்தர்ப்பங்கள் பலவற்றைத் தன் வசம் கொண்டுள்ளதை நாமறிவோம். அந்த ஏமாற்றுகள்..... இடையிலேயே பொய்த்துப்போயிற்று என்பதையும் காண்கிறோம்! நம்மை அளவற்ற ஆச்சரியத்துக்குள் ஆழ்த்தும் ஒரு காரியம் என்னவென்றால் மண்ணான மனுஷன் தன்னுடைய சிருஷ்டி கர்த்தாவையே ஏமாற்ற முனைவதுதான்!

தெலீலாள் என்ற வேசியை ஏமாற்றிய சிம்சோனின் ஏமாற்று வித்தை இடையிலேயே பொய்த்துப்போய், அதின் காரணமான அவன் தன் அழகிய கண்களை இழந்து, வெண்கல விலங்கணிந்தவனாய் தன் கொடிய சத்துருக்களுக்கே மாவரைக்கும் 'சாவிலும் கொடிதான பணியையே' மேற்கொள்ள வேண்டியதானது!

"உமது அடியான் எங்கும் போகவில்லை" என்று தனது பரிசுத்த எஜமானாகிய எலிசா தீர்க்கனை ஏமாற்ற முனைந்த கேயாசியின் ஏமாற்றுச் செயல், உடனடியாக உறைந்த மழை நிறமான வெண் குஷ்ட வெகுமதியால் பதிலளிக்கப்பட்டது!

நிலத்தை விற்று அதின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பேதுரு அப்போஸ்தலனிடம் பொய் புகன்று அவரை ஏமாற்ற முனைந்த அனனியா, சப்பீராள் இருவரையும் 'கல்லறைத் தோட்டம்' உடனடியாக வரவேற்பு கொடுத்துத் தனது ஆளுகைக்குள் சேர்த்துக்கொண்டது!

"யோசேப்பு காட்டு மிருகம் ஒன்றால் பீறுண்டு மாண்டுபோனான்" என்று தங்கள் தகப்பனை இரத்தம் தோய்க்கப்பட்ட யோசேப்பின் வஸ்திரத்தால் ஏமாற்றிவிட்ட யாக்கோபின் புத்திரரின் ஏமாற்று, பின் நாட்களில் துலாம்பரமாக வெளுத்துப் போய்விட்டது.

ஓ, வாலிபனே! "சகலமும் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக, வெளியரங்கமா யிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்ற தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடு! இன்றே மனந்திரும்பி இரட்சிக்கப்படுவாயாக!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.